FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | பொருளியல் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1.** | 4 | **11.** | 4 | **21.** | 1 | **31.** | 1 | **41.** | 2 |
| **2.** | 5 | **12.** | 5 | **22.** | 4 | **32.** | 1 | **42.** | 3 |
| **3.** | 3 | **13.** | 5 | **23.** | 5 | **33.** | 1 | **43.** | 4 |
| **4.** | 4 | **14.** | 1 | **24.** | 1 | **34.** | 5 | **44.** | 4 |
| **5.** | 1 | **15.** | 3 | **25.** | 4 | **35.** | 5 | **45.** | 1 |
| **6.** | 5 | **16.** | 2 | **26.** | 2 | **36.** | 3 | **46.** | 5 |
| **7.** | 4 | **17.** | 1 | **27.** | 1 | **37.** | 4 | **47.** | 2 |
| **8.** | 1 | **18.** | 5 | **28.** | 2 | **38.** | 1 | **48.** | 2 |
| **9.** | 4 | **19.** | 4 | **29.** | 2 | **39.** | 4 | **49.** | 5 |
| **10.** | 5 | **20.** | 4 | **30.** | 1 | **40.** | 1 | **50.** | 2 |

விசேட அறிவுறுத்தல் : ஒரு சரியான விடைக்கு புள்ளி **1** வீதம் 50

மொத்தப் புள்ளிகள் **1X50 =50**

## பகுதி II

**01.** 1. **கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் நேர்க் கூற்றுக்களா?நியமக் கூற்றுக்களா எனக் குறிப்பிடுக?**

அ. ஒவ்வொரு அரச ஊழியர்களுக்கும் மாதாந்த சம்பளம் 5000 ரூபா அதிகரிக்க வேண்டும். நியமக் கூற்று

ஆ. பணநிரம்பலுக்கும் பொதுவிலைமட்டத்திற்குமிடையில் நேர்கணியத் தொடர்பு காணப்படும். நேர்க் கூற்று

இ. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1% ஆகக் காணப்படுகின்றது. நேர்க்கூற்று

ஈ. இலங்கை தனது அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவிகளைப் பெற வேண்டும். நியமக்கூற்று (4x1=4புள்ளிகள்)

2. **அ. அமையச் செலவு என்பதனை வரைவிலக்கணப்படுத்துக?** (2புள்ளிகள்)

மாற்றுத் தெரிவுகளுக்கிடையில் ஒரு மாற்றைத் தெரிவு செய்தால் இன்னொரு மாற்றுச் சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். இந்த வகையில் மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையில் ஒரு மாற்றைத் தெரிவு செய்தால் அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதியானது அமையச் செலவாகக் கருதப்படும்.

(2 புள்ளிகள்)

**ஆ. கூடிச்செல்லும் அமையச்செலவு விதி என்றால் என்ன?** (2 புள்ளிகள்)

நிறைதொழில்மட்டப் பொருளாதாரமானது மாற்றுத் தெரிவுகளுக்கிடையில் ஒரு மாற்றைத் தெரிவு செய்து சம அலகால் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போது அதற்குப் பதிலாக இழக்கப்படுகின்ற மற்றைய பண்ட உற்பத்தியின் அளவானது தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதல் கூடிச்செல்லும் அமையச்செலவு விதி ஆகும். (2 புள்ளிகள்)

3. **அ. பொருளாதாரமல்லா வளம் என்பதால் கருதப்படுவது என்ன?** (2 புள்ளிகள்)

இயற்கையினால் இலவசமாக வழங்கப்படுவதும், அமையச் செலவு அற்ற பொருட்கள் சேவைகளுடன் உற்பத்திக்காகப் பயன்படுத்தக் கூடிய அருமையற்ற வளங்கள் பொருளாதாரமல்லா வளங்களாகும். (2 புள்ளிகள்)

**ஆ. பொருளாதார வளத்தின் பிரதான பண்புகளைக் குறிப்பிடுக?** (2 புள்ளிகள்)

- அருமையானது
- அமையச் செலவுடையது
- மாற்றுப்பயன்பாடுடையது. (2x1 = 2புள்ளிகள்)

**4. பொருளாதாரத்தில் உள்ள வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தல் பொருட்டு பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் எவை?** (4 புள்ளிகள்)

- வளப்பங்கீட்டின் வினைத்திறன் மற்றும் உற்பத்தியில் வினைத்திறன் ஆகிய இரண்டினதும் மொத்தம் பொருளாதார வினைத்திறனாகும்.
- உற்பத்தியில் வினைதிறனை அடைவதற்கு தேவையான இரணடு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
- நிறை தொழில்மட்டமும் பூரண உற்பத்தியுமாகும்.
- வள ஒதுக்கீட்டின் வினைத்திறன் என்பது பொருளாதாரததில் உள்ள வரையறைக்குட்பட்ட வளங்களையும் சமூகத் தெரிவுக்குப் பொருத்தமான வகையில் பிரித்து ஒதுக்குவதாகும்.
- இங்கு நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனையாவது எலலைசெலவுச் எல்லைநலனுக்குச் சமப்படுவதாகும்.
  (MB = MC) அல்லது (MC = MR) ஆகும். வளப்பங்கீட்டில் வினைத்திறன் காணப்படுவது உற்பத்திச் சாத்திய வளையியின் ஒரு புள்ளியில் மட்டுமே.
- குறித்த பண்டத்தின் மேலதிக அலகொன்றை நுகர்வதனால் பெறப்படும் நலன் எல்லைபயனாகும். இது பண்டத்திற்கான நுகர்வோன் செலுத்த விரும்பும் உச்ச விலையாகும். இதனால் எல்லைப்பயன்(MB) விலைக்கு (P) சமப்படும். குறிதத் ஒரு பண்டத்தின் உற்பத்தியை ஒரு அலகால் அதிகரிக்கும்போது மொத்தச் செலவிற்கு புதிதாகச் சேரும் பெறுமதி எல்லைச் செலவாகும்(MC).
- இதனால் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் நிறைவேற்றப்படுவதற்கு MC=MB=P எனஅமைதல் வேண்டும்.


5. **அ. உற்பத்தி சாத்திய வளையி வரைதல் தொடர்பான பிரதான எடுகோள்கள் எவை?** (2 புள்ளிகள்)

- இரு பண்ட வகைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.
- பொருளாதாரத்தில் உள்ள வளங்களின் அளவு நிலையானது.
- குறிப்பிட்ட காலத்தில் தொழினுட்பத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.
- வளங்கள் பூரணமாகவும் உச்ச வினைத்திறனுடனும் பயன்படுத்தப்படுகின்றன.

(2x1=2புள்ளிகள்)


**ஆ. அதிகரிக்கும் அமையச் செலவு தொழிற்படும் ஒரு பொருளாதாரத்தில் பின்வரும் நிகழ்வுகளைச் சாத்திய வளையியில் குறித்துக் காட்டுக?** (2 புள்ளிகள்)

i. காரணிவளப்போற்றில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு




(1 புள்ளி)

ii. வளங்கள் கீழுழைப்பில் உள்ள நிலைமை




(1புள்ளி)

---

**02.** 1. **அ. கேள்ளி விதியினை விளக்குக?** (2 புள்ளிகள்)

தரப்பட்ட குறிப்பிட்ட சந்தர்ப்பமொன்றில் கேள்வியைப் பாதிக்கும் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறிப்பிட்ட பண்டத்தின் விலைக்கும் அதன் கேள்வித் தொகைக்கும் இடையே காணப்படும் எதிர்கணியத் தொடர்பு கேள்வி விதி என அழைக்கப்படும். (2 புள்ளிகள்)

**ஆ. கேள்வி விதிக்கான எடுகோள்களைக் குறிப்பிடுக?** (2 புள்ளிகள்)

- குறிப்பிட்டச் சந்தர்ப்பம் ஒன்றில் விலையும் கேள்வித் தொகையும் கருத்திற் கொள்ளப்படல்.
- விலைத் தவிர்ந்த கேள்வியைப் பாதிக்கும் ஏனையக் காரணிகள் மாற்றமின்றியிருத்தல்
- சாதாரண பண்டமொன்றின் கேள்வி கருத்திற் கொள்ளப்படல்.
- பகுத்தறிவுள்ள கொள்வனவாளரின் நடத்தை கருத்திற் கொள்ளப்படல். (2x1 =2புள்ளிகள்)

2. **அ. தனிநபர்க் கேள்வியைச் சந்தைக் கேள்வியிலிருந்து வேறுபடுத்துக** (2 புள்ளிகள்)

- குறிப்பிட்ட காலத்தினுள் சந்தையில் உள்ள கொள்வனவாளர் ஒருவரினால் குறிப்பிட்ட பண்டத்துக்குக் காணப்படும் பல்வேறு விலைகளின் கீழ் கொள்வனவு செய்ய எதிர்ப்பார்க்கப்படும் தொகை தனிநபர் கேள்வி எனப்படும்.

(1 புள்ளி)

- குறிப்பிட்ட காலத்தினுள் சந்தையில் உள்ள சகல கொள்வனவாளர்களினாலும் குறிப்பிட்ட பண்டத்துக்குக் காணப்படும் பல்வேறு விலைகளின் கீழ் கொள்வனவு செய்ய எதிர்ப்பார்க்கப்படும் தொகைகளின் கூட்டுத் தொகை சந்தைக் கேள்வி என அழைக்கப்படும்.

(1 புள்ளி)

**ஆ. சாதாரண பண்டம் ஒன்றிற்கான கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக?**

(2 புள்ளிகள்)

- குறிப்பிட்ட பண்டத்தின் விலை
- தொடர்புடைய பண்டங்களின் விலை
- நுகர்வோரின் வருமானம்
- நுகர்வோனின் சுவை
- எதிர்காலம் பற்றிய எதிர்பார்க்கைகள் (4x½= 2புள்ளிகள்)

**3. சீனிக்கான சந்தைக் கேள்வி (Qd), நிரம்பல் (Qs) அட்டவணை வருமாறு**

| P | Qd (millon) | Qs(millon) |
|---|---|---|
| 100 | 1.0 | 0.5 |
| 200 | 0.5 | 1.0 |

விலை 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவாக அதிகரிப்பின்

**அ. நுகர்வோன் செலவு மாற்றத்தை கணிப்பிடுக?** (2 புள்ளிகள்)

| P | Qd (millon) | CE=PXQd |
|---|---|---|
| 100 | 1.0 | 100 |
| 200 | 0.5 | 100 |

(1 புள்ளி)

நுகர்வோன் செலவு மாற்றம் = 100-100 = 0 (பூச்சியம்) (1புள்ளி)

**ஆ. நுகர்வோன் செலவு மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு கேள்வி நெகிழ்ச்சியை விளக்குக?**

(2 புள்ளிகள்)

- ஒருமை நெகிழ்ச்சி (1 புள்ளி)
- ஏனெனில் விலை மாற்றமடையினும் நுகர்வோன் செலவு மாற்றமடையவில்லை (1 புள்ளி)

**4. நிரம்பல் கோடு நகர்வடைவதற்கு ஏதுவான காரணிகள் நான்கைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?**

(4 புள்ளிகள்)

- மூலப்பொருட்களின் விலை மாற்றமடைதல்
- தொழினுட்பம் மாற்றமடைதல்
- தொடர்புள்ள பண்டங்களின் விலை மாற்றமடைதல்
- உற்பத்தியாளரின் எதிர்ப்பார்க்கைகள் மாற்றமடைதல்
- சந்தையிலுள்ள உற்பத்தியாளர்களின் அளவு மாற்றமடைதல்
- அரசாங்கத்தின் கொள்வனவு மாற்றமடைதல்

(இரண்டு காரணியும் விளக்கமும் இருப்பின் 4 புள்ளிகள்) அல்லது 4x1= 4 புள்ளிகள்)

**5. நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக?** (4 புள்ளிகள்)

- காரணிகளின் அசையக் கூடிய தன்மை
- பண்டத்தின் தன்மை
- களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய ஆற்றல்
- விலை மாற்றத்துக்கேற்ப நிரம்பலை மாற்றுவதற்கு எடுக்கும் காலம்

(இரண்டு காரணியும் விளக்கமும் இருப்பின் 4புள்ளிகள்) அல்லது 4x 1= 4 புள்ளிகள்

**03. 1. சீனிக்கான சந்தைக் கேள்வி (Qd), நிரம்பல் (Qs) கோடுகள் பின்வரும் சமன்பாட்டின் மூலம் தரப்படுகின்றன.**

**Qd = 500-10p Qs = -100 + 20p**

**அரசாங்கம் அலகு வரியாக 3 ரூபாவை விதிக்கின்றது எனின்**

**அ. வரிக்குப்பின்னரான சமநிலை விலை மற்றும் தொகை யாது?** (4 புள்ளிகள்)

$Qd = Qs_T$

500-10p =-160 +20p (1 புள்ளி)

660 =30p

p = 22 /=

EP= 22/= (1 புள்ளி )

$Qs_T$ = -100 + 20(p-t)

= -100+20(p-3)

=-100+20p-60

= -160 +200p (1 புள்ளி)

Qd = 500-(10X22)

= 500 -220

= 280 அலகுகள்

EQ= 280 அலகுகள் (1 புள்ளி)

**ஆ. வரி மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு?** (2 புள்ளிகள்)

அரச வரிவருமானம் = அலகுவரி X புதியசமநிலைத் தொகை (*1 புள்ளி*)

= 3X280

= RS 840 (1புள்ளி)

**இ. புதிய சமநிலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிடுக?** (2 புள்ளிகள்)

$$Ped = b \times \frac{P}{Qd}$$ (*1 புள்ளி*)

$$= -10 \times \frac{22}{280}$$

= - 0.78 (*1 புள்ளி*)

**ஈ. வரிக்குப் பின்னரான உற்பத்தியாளர் மிகையினைக் கணிப்பிடுக ?** (4 புள்ளிகள்)

$$EQ(n) \times \frac{(PP_{(after\ tax)} - MSP)}{2}$$ (*1 புள்ளி*)

$$= \frac{280 \times (19 - 5)}{2}$$ (*2 புள்ளிகள்*)

= Rs. 1960 (*1 புள்ளி*)


**2. அ. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலை அர்த்தமுள்ளதாக்குவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் எவை?** (2 புள்ளிகள்)

- இறக்குமதி
- உற்பத்தியாளரை ஊக்குவித்தல்
- பங்கீடு (2x1 =2புள்ளிகள்)

**ஆ. ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாடு விதிப்பதன் காரணமாக சந்தை விலைப் பொறிமுறை இயக்கமற்றுப் போவதால் பற்றாக்குறையான பண்டங்களைப் பங்கீடு செய்வதற்கு விலையல்லா மூலகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?** (2 புள்ளிகள்)

- பங்கீட்டு அட்டை விநியோகம்
- வரிசை முறை
- இலஞ்சம் மூலம் பங்கீடு செய்தல்
- வேறு பண்டங்களுடன் இணைத்துப் பங்கீடு செய்தல்.
- கறுப்புச்சந்தை விலை (2x1 =2புள்ளிகள்)

**3.**




a. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலைக்கு முன்னர் பொருளாதார மிகைப் பிரதேசம் A+B+C+D+E+F *(1 புள்ளி)*

b. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலைக்கு பின்னர் பொருளாதார மிகைப் பிரதேசம் A + F *(1 புள்ளி)*

c. பொருளாதாரமிகை இழப்புப் பிரதேசம் C + E *(1 புள்ளி)*

d. ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலை காரணமாக B + D நுகர்வோர்மிகையினுள் உள்ளடங்குவதைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

- பற்றாக்குறையான பண்டங்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் செலவிடப்படும் காலமும் பணத்தொகையும்.
- கியூவில் (வரிசையில்) நிற்பதற்கு எடுக்கும் காலம் (2x1 =2புள்ளிகள்)

---

**04. 1. குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு மற்றும் நீண்ட கால உற்பத்தித் தொழிற்பாடு என்பவற்றை விளக்குக?**

(4 புள்ளிகள்)

தொழிற்சாலையில் தொழினுட்பமும் இயலளவும் மாற்றமடையாது இருக்கையில் மாறும் உள்ளீடுகளை மாற்றும் போது உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்கும் இடையில் நிலவும் தொழில்நுட்ப ரீதியான தொடர்பு குறுங்கால உற்பத்தித் தொழிற்பாடு என அழைக்கப்படும். அதாவது

$$Q = f\,(L, \overline{K})$$

**L –** மாறும் காரணி (ஊழியம்) **K –** நிலையான மூலதனம்

- குறுங்காலத்தில் மாறும் காரணிகள் மட்டுமே மாற்றக்கூடியதாக இருப்பதனால்,மேலும் இத்தொழிற்பாட்டைப் பின்வருமாறு காட்டலாம்.
- **Q = f ( L1, L2, L3, ………………… Ln, K )** (உழைப்பு மாற்றக்கூடிய காரணி என்ற கருத்தில்)
  **Q = f ( V1, V2, V3, …………………… Vn , K )** என்றும் காட்டப்படலாம்.
- உற்பத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடைய சகல காரணிகளையும் மாற்றுவதற்குப் போதுமான காலம் நீண்ட காலம் ஆகும். இதனாலேயே உற்பத்தி நிறுவனமொன்று நீண்ட காலத்தில் காணப்படும் எல்லா உள்ளீடுகளும் மாறும் உள்ளீடுகளாகும்.
- உற்பத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடைய சகல உள்ளீடுகளையும் மாற்றும் போது உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்கும் இடையில் காணப்படும் தொடர்பைப் பின்வருமாறு நீண்ட கால உற்பத்தித் தொழிற்பாட்டின் மூலம் காட்டலாம்.
  **Q = f ( L1 , L2, L3, …… Ln , K1, K2, K3, ………….. Kn )**

**2. அ. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என்பதனை விளக்குக? (2 புள்ளிகள்)**

உற்பத்தி நிறுவனமொன்று குறுங்காலத்தில் நிலையான உள்ளடுகளுடன் ஒன்றிணைத்து மாறும் உள்ளீடுகளை மட்டும் அதிகரிகும் போது, மாறும் உள்ளீட்டின் எல்லை விளைவும் சராசரி விளைவும் ஒரு சந்தர்ப்பத்திற்குப் பின்னர் குறைந்து செல்வதானது குறைந்து சல்லும் எல்லை விளைவு விதி என அழைக்கப்படும்.

**ஆ. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியுடன் தொடர்புடைய எடுகோள்களைக் குறிப்பிடுக?**

(2 புள்ளிகள்)

1. எல்லா மாறும் உள்ளீட்டு அலகுகளும் ஓரினத்தன்மைக் கொண்டவை.
2. குறித்த உற்பத்திச் செயற்பாட்டில் தொழினுட்பம் மாற்றமின்றிக் காணப்படும். (2x1=2புள்ளிகள்)


**3. கீழே தரப்பட்டுள்ள காரணிகளில் குறுங்கால எல்லைச் செலவில் எவை தாக்கத்தை ஏற்படுத்தும் என சுருக்கமாக விளக்குக?** (4 புள்ளிகள்)

a. பெறுமானத்தேய்வுக்கான கிரயம் — தாக்கத்தை ஏற்படுத்தாது
b. மூலப்பொருள் கிரயம் — தாக்கத்தை ஏற்படுத்தும்.
c. ஆதனவரி — தாக்கத்தை ஏற்படுத்தாது
d. காப்புறுதித் தவணைக் கொடுப்பனவு — தாக்கத்தை ஏற்படுத்தாது

a,c,d நிலையான கிரயம் b மாறும் கிரயம் எனவே b மட்டும் குறுங்கால எல்லைச் செலவில் எவை தாக்கத்தை ஏற்படுத்தும்

4. **குறுங்கால சராசரி உற்பத்தி , எல்லை உற்பத்தி என்பன குறுங்கால செலவுக்கோடுகளுடன் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன.?** (4 புள்ளிகள்)

படம் 2 புள்ளிகள் விளக்கம் 2 புள்ளிகள்




**5. அ. சந்தை அமைப்புபக்கள் வேறுபடுவதற்கு அடிப்படையான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக?**

(2 புள்ளிகள்)

- சந்தையில் காணப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை
- பண்டத்தின் ஓரினத்தன்மை
- நிறுவனம் சந்தைக்குள் பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்கும் உள்ள உரிமை
- சந்தையிலுள்ள உற்பத்தி நிறுவனங்களுக்கிடையே காணப்படும் போட்டி நிலைமை

**ஆ. நிறைபோட்டிச் சந்தையின் இரு பிரதான பண்புகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)**

- உற்பத்திகள் ஓரினத்தன்மையானை
- விற்பனையாளர்களும் கொள்வனவாளர்களும் மிக அதிகமாக இருத்தல்.
- நிறுவனம் விலையை ஏற்போனாகக் காணப்படல்
- சந்தையில் உட்பிரவேசிக்க மற்றும் வெளிச்செல்லத் தடையில்லை.
- கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் சந்தை தொடர்பான
- தகவல்களைப் பூரணமாகவும் செலவுகள் இன்றியும் பெறலாம்.
- வளங்களின் அசைவுக்குத் தடையின்மை
- நீண்ட காலத்தில் சந்தையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் சாதாரண இலாபத்தை மட்டுமே உழைக்கும்.

**05. 1. பேரினப் பொருளாதாரக் கொள்கை என்பதனை விளக்குக? பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுக?** (4 புள்ளிகள்)

பேரினப் பொருளாதார நோக்கங்களை நோக்கிப் பொருளாதாரத்தை இயக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பேரினப் பொருளாதார நடவடிக்கைகள் என அழைக்கப்படும். (2 புள்ளிகள்)

1. நாணயக் கொள்கை
2. அரச நிதிக்கொள்கை அல்லது இறைக் கொள்கை
3. நிரம்பல் ஊக்குவிப்புக் கொள்கை
4. வருமானக் கொள்கை
5. நேரடிக் கட்டுப்பாடுகள்
6. வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் (2x1=2புள்ளிகள்)

2. **பொருளாதார செயற்பாடுகளில் அரசதுறையின் பிரதான தொழிற்பாடுகளை விளக்குக?** (4 புள்ளிகள்)

1. அரசினால் அறவிடப்படுகின்ற வரி வருமானத்திலிருந்து பொதுமக்களுக்குப் பொதுப்பண்டங்கள், சமூக நலப்பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
2. தேசிய பாதுகாப்பு, சட்டத்தையும் சமாதானத்தையும் பேணல், சுற்றாடல் பாதுகாப்பு, கல்வி சுகாதாரம் போன்ற சேவைகளை வழங்கல்.
3. பெருந்தெருக்கள், தொடர்பாடல் போன்ற பொருளாதார பொது மேந்தலைகளை வழங்குதல்
4. வீட்டுத்துறைக்கு, நுகர்வு மானியம், நிறுவனத்துறைக்கு உற்பத்தி மானியம் என்பவற்றை வழங்குதல். (4x1=4புள்ளிகள்)

3.

| | |
|---|---|
| ஊழியருக்கான இழப்பீடு (கொடுப்பனவு) | 10000 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 12500 |
| நிலையான மூலதன நுகர்வு | 2500 |
| கலப்பு வருமானம் | 15000 |
| மானியம் நீங்கலான உற்பத்தி மீதான வேறு வரிகள் | 2000 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறிய வரி | 1000 |

பின்வருவனவற்றைக் கணிக்குக :

அ. அடிப்படை விலையிலான மொத்த கூட்டப்பட்ட பெறுமதி

| | |
|---|---|
| ஊழியருக்கான இழப்பீடு (கொடுப்பனவு) | 10000 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 12500 |
| நிலையான மூலதன நுகர்வு | 2500 |
| கலப்பு வருமானம் | 15000 |
| மானியம் நீங்கலான உற்பத்தி மீதான வேறு வரிகள் | 2000 |
| | 42000 |

(சமன்பாடுக்கு 1 விடைக்கு 1 மொத்தம் 2 புள்ளிகள்)

4. சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படை விலையிலான மொத்த கூட்டப்பட்ட பெறுமதி + உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறிய வரி **42000 + 1000 = 43000** (சமன்பாடுக்கு 1 விடைக்கு 1 மொத்தம் 2 புள்ளிகள்)

5. கீழ்வருவன ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்கள் தருக
   அ. தேசிய வருமானத்திலிருந்து வீட்டுத்துறைக்குக் கிடைக்காத வருமானங்கள்
      மூலதன நுகர்வு
      பகிரப்படாத கம்பனி இலாபங்கள்
      கம்பனி வரி
   - சமூக பாதுகாப்புக்கான பங்களிப்பு நிதி
   - அரசாங்க சொத்து வருமானம் (2x1=2புள்ளிகள்)

   ஆ. தேசிய வருமானத்தில் உள்ளடங்காத வீட்டுத்துறைக்குக் கிடைக்கப் பெறும் வருமானங்கள்
   - தேறிய வெளிநாட்டு தனியார் இரண்டாம் நிலை வருமானம்
   - ஓய்வூதியம்
   - அரச கடன்களுக்காக வீட்டுத்துறைக்குக் கிடைக்கும் வட்டி
   - வீட்டுத்துறைக்குக் கிடைக்கும் ஏனைய மானியங்கள்

(2x1=2புள்ளிகள்)

6. நுகர்வுத் தொழிற்பாடு (C) = 600 + 0.8 Yd
   முதலீட்டுச் செலவினம் (I) = 200
   அரச கெள்வனவுகள் (G) = 300
   தேறிய ஏற்றுமதிகள்(X-M) = - 100
   தன்னியல்பான வரிகள் = 250
   தரவுகள் யாவும் மில்லியன் ரூபாவில்

   தன்னியல்பான வரிகள் 100 மில்லியனால் அதிகரிக்கும் அதேவேளை அரச கொள்வனவுகளும் 100 மில்லியனால் அதிகரிக்குமாயின்

   அ. தேசிய வருமானம் மாற்றமடையுமா? விளக்குக (2 புள்ளிகள்)
      ஆம் பெருக்கி விளைவு குறிப்பிட்டு 100 மில்லியனால் அதிகரிக்கும் எனின் 2 புள்ளிகள்

   ஆ. வரவு செலவுத்திட்ட மீதி மாற்றமடையுமா? விளக்குக? (2 புள்ளிகள்)
      இல்லை
      அதிகரிக்க முன் BB = T-G = 250 – 300 = -50 (1 புள்ளி)
      அதிகரித்த பின் BB = T-G = 350 – 400 = -50 எனவே மாற்றமில்லை (1 புள்ளி)

---

## உப பிரிவு (ஆ)

**06.** 1. அண்மிய பணத்திற்கும் பணப் பதிலீட்டுக்குமிடையேயான வேறுபாட்டை விளக்குக? (4 புள்ளிகள்)
உயர் திரவத்தன்மையுள்ள சொத்துக்கள் கிட்டிய பணம் என அழைக்கப்படும். கிட்டிய பணம் இலகுவாகப் பரிமாற்றூடகமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். (1 புள்ளி)
உ+ம் :- நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல், செலாவணி உண்டியல், வாக்குறுதிச்சீட்டு (1 புள்ளி)
பெறுமானத் திரட்டாகத் தொழிற்பட முடியாதெனினும் தற்காலிகமாகப் பரிமாற்றூடகமாகத் தொழிற்படும் கருவிகளே பணப் பதிலீடு என அழைக்கப்படும். (1 புள்ளி)
உ+ம் :- கடனட்டைகள் வரவு அட்டைகள் (1 புள்ளி)

2. அ. பணத்திற்கான கேள்வி என்றால் என்ன? (2 புள்ளிகள்)

குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் பணத்தைப் பணமாகத் தம்மிடம் வைத்திருப்பதற்குப் பொது மக்களிடம் காணப்படும் விருப்பம் பணத்தின் கேள்வி (திரவத்தேர்வு) என அழைக்கப்படும்.

(2 புள்ளிகள்)

ஆ. பொதுமக்கள் பணத்திற்கான கேள்வியை ஏற்படுத்துவது ஏன்? (2 புள்ளிகள்)

கொடுக்கல் வாங்கல் நோக்கம்

பாதுகாப்பு நோக்கம்

உத்தேச நோக்கம் (2x1 = 2புள்ளிகள்)

3. நாணயத் தளம் என்றால் என்ன? இது எவ்வாறு பணநிரம்பலுடன் தொடர்புபடுகின்றது.? (4 புள்ளிகள்)

குறிப்பிட்ட ஒரு நாட்டில் மொத்தப் பண நிரம்பலுக்கு அடிப்படையாகவுள்ள மத்திய வங்கிக்குரிய நேரடி நிதிப் பொறுப்புக்கள் அடிப்படைப் பணம் பொருளாதாரத்தின் மொத்தப் பண நிரம்பல் மற்றும் அடிப்படைப் பணம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு பணப் பெருக்கியினால் காட்டப்படும். அதனைப் பின்வருமாறு சமன்பாடு மூலம் காட்டலாம்.

$M = kH$

M - பண நிரம்பல்

k - பணப் பெருக்கி

H - அடிப்படைப் பணம்


அதன்படி பணப்பெருக்கியைக் கீழ்த் தரப்படும் வகையில் கணிப்பிடலாம். பணப்பெருக்கிக்கும் அடிப்படை பணத்திற்குமிடையிலான தொடர்பு

$$k = \frac{M}{H}$$

4. கெயின்சின் கோட்பாட்டின் அடிப்படையில் கேள்வித்தூண்டல் பணவீக்கத்தை விளக்குக? (4 புள்ளிகள்)

கெயின்சின் கோட்பாட்டில் பணவீக்கத்துக்கான காரணங்களை விளக்குவதற்காகக் கருத்திற் கொள்ளப்படுவது வருமானம் மற்றும் செலவுப் பகுப்பாய்வாகும்.

- பொருளாதாரம் ஒன்று நிறை தொழில் மட்டச் சமநிலையினை அடைந்த பின்னர் மேலும் மொத்தக் கேள்வி அதிகரிக்குமாயின் பொருட்கள் சேவைகளின் அளவினை அதிகரிக்க முடியாத காரணத்தினால் பொது விலைமட்டம் அதிகரிக்க தொடங்குகிறது.
- பணவீக்கம் தொடர்பான கெயின்சின் இவ்விளக்கம் கீழே தரப்படும் வரிப்படத்தினால் காட்டபப்டுகிறது.




5. சட்டப்படியான ஒதுக்குத் தேவை 20% வங்கியானது 40 மில்லியன் காசு ஒதுக்கினையும் 160 மில்லியன் கடன்களையும் முற்பணங்களையும் கொண்டுள்ளது.அத்துடன் 200 மில்லியன் மொத்த கேள்வி வைப்புக்களையும் கொண்டுள்ளது.

அ. இந்த வங்கியானது பொதுவான வங்கிமுறைமையின் கீழ் தொழிற்படுகின்றது எனக் கருதுக. இந்த வங்கி அதன் கடனை விரிவுபடுத்த முடியுமா? உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

இல்லை. தேவைப்படும் ஒதுக்கு 40 பேணப்படும் ஒதுக்கு 40 ஆகவே மிகை ஒதுக்கு இல்லை எனவே கடனை விரிவுபடுத்த முடியாது.
(தேவைப்படும் சட்டப்படியான ஒதுக்கு மதிப்பீடு 1 புள்ளி இவிளக்கம் 1 புள்ளி மொத்தம் 2 புள்ளிகள்)

ஆ. சட்டப்படியான ஒதுக்குத் தேவை 15% ஆக மாற்றமடையுமாயின் வங்கிவழங்கும் கடனில் எவ்வளவு. அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்படும். *(2 புள்ளிகள்)*

ஆம் தேவைப்படும் ஒதுக்கு 30 பேணப்படும் ஒதுக்கு 40 ஆகவே மிகை ஒதுக்கு 10 எனவே கடனை விரிவுபடுத்த முடியும்
(தேவைப்படும் சட்டப்படியான ஒதுக்கு மதிப்பீடு 1புள்ளி இவிளக்கம் 1புள்ளி மொத்தம் 2புள்ளிகள்)

**07.** 1. சந்தைத் தோல்வி என்றால் என்ன? சந்தைத் தோல்வியில் தாக்கத்தைச் செலுத்தும் பிரதான காரணிகள் எவை?. *(4 புள்ளிகள்)*

சமூக நலன் கருதி அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வதில் விலைப்பொறி முறையானது தோல்வியடைவதனைச் சந்தைத் தோல்வி எனலாம். (1 புள்ளி)

*1.* வள ஒதுக்கீட்டின் வினைத்திறனின்மை
*2.* பேரினப் பொருளாதார உறுதியின்மை
*3.* வருமானப் பங்கீட்டின் சமமின்மை (3x1 =3புள்ளிகள்)

2. உலகளாவிய பொதுப்பண்டம் என்றால் என்ன? உலகளாவிய பொதுப்பண்டத்தை அடையாளப்படுத்த உதவும்பண்புகள் எவை? *(4 புள்ளிகள்)*

சம்பிரதாய ரீதியாக நாட்டினுள் காணப்படும் பொதுப் பண்டங்களுக்கு மேலதிகமாக தேசிய எல்லையை கடந்த நிலையில் உள்ள பொதுப் பண்டங்களும் காணப்படுகின்றன. (2 புள்ளிகள்) இவை உலகப் பொதுப் பண்டங்களாகக் கருதப்படும்.

- உலகப் பொதுப் பண்டத்தில் பின்வரும் பண்புகளைக் காணலாம்.
- நுகர்வில் போட்டியின்மை
- விலக்குதல் விதிக்கு உட்படாதது
- இப்பண்டங்களால் பெறப்படும் நன்மையை உலக மக்கள் அனைவரும் அனுபவிக்கலாம்.

(2x1 =2புள்ளிகள்)

3. அ. வரி விதிதப்பின் நோக்கங்கள் எவை? (2 புள்ளிகள்)

- வருமான செல்வப் பங்கீட்டின் சமமின்மையைக் குறைத்தல்.
- வினைத்திறனை உயர்த்துவதற்கு வளங்களை முகாமைப்படுத்தல்.
- உயர்ந்த சமூகச் செலவை ஏற்கும் தீங்கிழைக்கும் பொருட்களின் நுகர்வைக் கட்டுப்படுத்தல்.
- மொத்தக் கேள்வியின் மீதான செல்வாக்கு செலுத்துதல்
- மொத்த நிரம்பல் மீதான செல்வாக்கு செலுத்துதல் (2x1 =2புள்ளிகள்)

ஆ. வரி அறவிடுவதால் நியாயத்தன்மை என்ற தத்துவமானது பூர்த்தி செய்ய வேண்டிய இரணடு நிபந்தனைகளைக் குறிப்பிடுக? *(2 புள்ளிகள்)*

- நிலைக்குத்தான நியாயத்துவம்
- கிடையான நியாயத்துவம் (2x1=2புள்ளிகள்)

4.

| விடயம் | மில்லியன் ரூபா |
|---|---|
| கொடை உள்ளடங்கலான அரசின் மொத்த வருமானம் | 170 000 |
| அரசின் மொத்த வருமானம் | 165 000 |
| வரி வருமானம் | 150 000 |
| வரியல்லா வருமானம் | 15 000 |
| கொடைகள் | 5 000 |
| மொத்த செலவினம் தேறிய கடன் வழங்கல் உள்ளடங்கலாக. | 200 000 |
| மொத்த மீண்டெழும் செலவினங்கள் | 175 000 |
| வட்டிக் கொடுப்பனவு | 10000 |
| மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | 25 000 |
| பொது முதலீடு | 20 000 |

மேலே தரப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட தரவுகளுக்கமைய பின்வருவனவற்றைக் கணிக்குக.

அ. நடைமுறைக் கணக்கு மீதி (*2* புள்ளிகள்)

கொடை நீங்கலான மொத்த அரச வருமானம் -நடைமுறைச் செலவினம் (1 புள்ளி)

= (170 000 -5 000) – 175000 = - 10000 பற்றாக்குறை10000 (1 புள்ளி)

ஆ. முதன்மைக் கணக்கு மீதி (2 புள்ளிகள்)

மொத்த அரச வருமானம் - வட்டிக் கொடுப்பனவு நீங்கலான மொத்த அரச செலவினம்

170 000 – (200 000 – 10000) = -20000 (1 புள்ளி)

பற்றாக்குறை20000 (1 புள்ளி)

5. நிரம்பல் பக்கக் கொள்கை என்பதனை வரையறுத்து ,நிரம்பல் பக்கக் கொள்கை கருவிகளைக் குறிப்பிடுக? (*4* புள்ளிகள்)

நிரம்பலாளர் கொள்கை என்பது நுண்பாக பொருளாதார, அரச நிதிக் கொள்கையாக இருப்பதுடன், அவற்றின் மூலம் சந்தைப் பொருளாதாரத்தின் வினைத்திறனை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதே எதிர்பார்க்கப்படும்.

- நிரம்பல் ஊக்குவிப்புக் கொள்கையை செயற்படுத்துவதனால் முதலீடு அதிகரிப்பதுடன், உற்பத்திச் செலவு குறைவதைப் போல உற்பத்திக் காரணிகளின் விளைதிறனும் உயர்வடையும். பிரதான பேரினப் பொருளாதார மாறிகளை எதிர்பார்த்த மட்டத்தை அடைவதறகு் நிரம்பல் ஊக்குவிப்பு கொள்கைகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (2 புள்ளிகள்)
- நிரம்பல் பக்க ஊக்குவிப்புக் கொள்கைக் கருவிகள்
- வரிச் சீராக்கம்
- தனியார் மயமாக்கல்
- கண்காணிப்பு
- ஊழியச் சந்தையை சீர்செய்தல்
- மூலதனச் சந்தையை சீர்செய்தல் (2x1 =2புள்ளிகள்)

**08.** *1.* ஒப்பீட்டு நயக் கோட்பாடு என்பதனை விளக்குக. ஒப்பீட்டு நயக் கோட்பாட்டுக்கான மூலங்கள் எவை? (4 புள்ளிகள்)

குறித்த ஒரு நாட்டிற்கு குறித்த ஒரு பொருளை மற்றைய நாட்டின் அமையச் செலவுடன் ஒப்பிடும் போது குறைநத் அமையச் செலவில் அப்பண்டத்தை உற்பத்தி செய்ய முடியுமாகஇருந்தால் அந்த நாட்டிற்கு அவ்வுற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை உண்டு என்றும், குறித்த நாட்டிற்குக் குறித்தவொரு பொருளை உற்பத்தி செய்கையில் குறித்த நாட்டிற்கு ஒப்பீட்டு ரீதியில் அதிகளவான அமையச் செலவினை ஏற்க வேண்டியிருப்பின் அப்பண்ட உற்பத்தியில் ஒப்பீட்டு ரீதியில் நன்மையற்ற தன்மை நிலவும் என்பது இக் கோட்பாடாகும் (2 புள்ளிகள்)

வளங்களின் திரட்சியில் மாற்றம்:

பண்புரீதியான தன்மை:

சுவையில் மாற்றம்:

அளவுத்திட்டச் சிக்கனம்:

பண்ட வேறுபாடு:

தொழில்நுட்ப வேறுபாடு:.

அரச கொள்கை:

பணவீக்கம்:.

அமைவிடம்: (2x1 =2புள்ளிகள்)

(மாணவன் 2019 க.பொ.த உயர்தர புள்ளி வழங்கல் திட்டத்திற்கு அமைவாக விடையளித்திருப்பினும் புள்ளி வழங்குக)

2. தீர்வை வரி அல்லாத பாதுகாப்பு வாதச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

- பங்கீட்டு முறை அதாவது கோட்டா முறையை அமுல்படுத்துதல்.
- உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மானியம் அல்லது ஊக்குவிப்புகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- குவித்தல்.
- தன்னிச்சையாக ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல்.
- வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு.
- ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல்.
- வியாபாரத் தடைகளை விதித்தல்.
- தீர்வாகத் தொழில்நுட்ப நியமங்களை அமுலாக்குதல். (4x1 =4புள்ளிகள்)

3. அ. பண்ட வர்த்தக மாற்று விகிதம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ஏற்றுமதி அலகொன்றுக்காகப் பெற்றுக் கொள்ளக˙கூடிய இறக்குமதி அலகுத் தொகையே பண்ட வர்த்தகமாற்று விகிதத்தினால் காட்டப்படும்.

ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணை இறக்குமதி விலைச் சுட்டெண்ணினால் பிரித்துக்கணிக்கப்படுகின்ற வர்த்தகமாற்று விகிதம் பண்ட வர்த்தக மாற்று விகிதமாகும்.

$$\text{பண்ட வர்த்தக மாற்று விகிதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$$

(வரைவிலக்கணம் 1புள்ளி சமன்பாடு 1 புள்ளி மொத்தம் 2 புள்ளிகள்)

ஆ. பண்ட வர்த்தகமாற்று விகிதம் பண்ட வர்த்தகமாற்று விகிதம் குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (2 புள்ளிகள்)

- ஏற்று மதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்து இறக்குமதி விலைச்சுட்டெண் அதிகரித்தல்.
- இறக்குமதி விலைச் சுட்டெண்ணைவிட வேகமாக ஏற்றுமதி விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைதல்.
- ஏற்றுமதி விலைச் சுட்டெண் நிலையாக இருக்கும்போது இறக்குமதிவிலைச் சுட்டெண் அதிகரித்தல்.
- இறக்குமதி விலைச் சுட்டெண்நிலையாக இருக்கையில் ஏற்றுமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைதல.

(2x1 = 2புள்ளிகள்)

4. குறித்தவொரு நாட்டில் காலணி உற்பத்தி நிறுவனமொன்று ஒரு சோடிக் காலணியை 5 000 ரூபா விலையில் விநியோகிக்கின்றது எனக் கருதுக. அக்காலணிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை (தோல், நூல்போன்றவை) இறக்குமதி செய்வதற்காக 3 000 ரூபா செலவாகியது எனக் கருதுக. மேலும் உள்நாட்டு நிறுவனம் உற்பத்தி செய்யும் காலணிகளுக்குச் சமனான காலணிகளை இறக்குமதி செய்வதுடன் அதுவும் உள்நாட்டுச் சந்தையில் 5 000 ரூபாப்படி விநியோகிக்கப்படுவதாகக் கருதுக.

உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாப்பதற்காக இறக்குமதியாகும் காலணி மீது 10% இறக்குமதி தீர்வை வரியை விதிப்பதாகக் கருதுக. மெய் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம் யாது?

தீர்வை வரிக்கு முன்னருள்ள காலணிச் சோடியொன்றின் விலை = 5 000/=

$$\text{தீர்வை வரிக்குச் செலவாகும் பணம்} = \text{ரூபா } \frac{5\ 000 \times 10}{100}$$

= ரூபா 500 (1 புள்ளி)

தீர்வை வரிக்குப் பின்னருள்ள இறக்குமதிக் காலணியின் விலை = 5 000 + 500 = ரூபா 5 500 (1 புள்ளி)

தீர்வை வரியின் பின்னர் இறக்குமதிக் காலணிச் சோடியொன்றின் விலை = ரூபா 5 500

தீர்வை வரியின் பின்னர் உள்நாட்டு உற்பத்தி = ரூபா 5 500 - 3 000

நிறுவனத்தின் கூட்டிய பெறுமதி ரூபா 2 500(1புள்ளி)

$$ERP\ \frac{(V_1 - V_0)}{V_0} \times 100$$

$$\frac{2\ 500 - 2\ 000}{2\ 000} \times 100 = 25\%$$ (1 புள்ளி)

5. பொதுச் சந்தை என்றால் என்ன? உதாரணங்கள் தருக? (4 புள்ளிகள்)

அங்கத்துவ நாடுகளுக்கிடையே பொருள், சேவை வர்த்தகங்கள் தடையின்றிச் செயற்படுத்துவதற்கும், அங்கத்துவ நாடுகள், அங்கத்துவமல்லா நாடுகளுடன் வர்த்தகத்தைமேற்கொள்கையில் பொதுவான கொள்கையொன்றைப் பின்பற்றுவதற்கும், அங்கத்துவநாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகள் சுதந்திரமாக அசைவதற்கும் நாடுகள் ஒன்றிணைவதானது பொதுச் சந்தை என அழைக்கப்படும்.
இதன் கீழ், உழைப்பு, மூலதனம் போன்ற உற்பத்திக் காரணிகளும் பொருட்களும் சேவைகளும் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாடுகளுக்கிடையில் தடையின்றி அசையச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். (2 புள்ளிகள்)

பொது வர்த்தக பங்குடைமைக்கு உதாரணங்கள்

- கரீபியன் சமூக பொதுச் சந்தை (CARI Com)
  (The Caribbean Community Common Market)
- மத்திய அமெரிக்க பொதுச் சந்தை (CACM)
  (Central American Common Market)
- மத்திய ஆபிரிக்க பொருளாதார நிதிச் சமூகம் (CEMAC)
  (Central African Economic & Monetory Community) (2 X1 =2 புள்ளிகள்)

---

**09.** *1.* வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

- நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு வலுவடைதல்.
- சந்தை விரிவாக்கமடைதல்.
- போக்குவரத்துச் செலவு குறைதல்.
- உள்நாட்டுச் சந்தையில் பொருட்களின் விலை குறைவடைதல்.
- வெளிநாட்டு முதலீடு வளர்ச்சியடைதல்.
- புதிய கைதொழில் பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடிதல்
- தொழில்வாய்ப்பு உயர்வடைதல்.
- மூலப்பொருட்களின் விலை குறைதல்.
- ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை விரிவாக்குதல். (4x1 =4புள்ளிகள்)

2. உலக மயமாதலுக்குப் பாதகமாகப் முன்வைக்கப்படும் வாதங்களைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

- உலக மயமாதலின் நன்மைகள் உலக மக்கள் அனைவருக்கும் நியாயமாகப்பங்கீடு செய்யப்படாமை.
- அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குக் கூடுதலான நலன்கள் கிட்டுதல்.
- சர்வதேச ரீதியில் வருமான ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தல்.
- சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் ஏனைய நாடுகளுக்கு இலகுவாகப் பரவுதல்.
- சமூகப் பிரச்சினைகள் விருத்தியடைதல்.
- மனித வாழ்க்கை பற்றிய பாதுகாப்பற்ற தன்மையொன்று ஏற்படல்.
- சூழற் பிரச்சினைகள் ஏற்படல்.
- கலாசாரச் சீரழிவுகள் ஏற்படல்.
- நிதிச் சந்தையில் நிலையற்ற தன்மைகள் ஏற்படுவதனால் பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றுதல்.
- உள்நாட்டுக் கைத்தொழில் வீழ்ச்சி அடைதலும் வேலையின்மை ஏற்படலும்.
- பயங்கரவாதம் பரவுதல்.
- சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படல். (4X1 =4புள்ளிகள்)

3. இலங்கை மத்திய வங்கியின் அண்மைக்கால தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பை விளக்குக?
(அண்மைய 2 ஆண்டு தரவும் விளக்கமும் இருப்பின் 4புள்ளிகள் தரவு மட்டுமாயின் 2 புள்ளிகள்)

4. இலங்கையின் ஏற்றுமதி வியாபாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிடுக?அதற்காக முன்வைக்க கூடிய தீர்வுகள் சில தருக? (4 புள்ளிகள்)
- ஏற்றுமதிப் பயிர்களின் விலைகள் தொடர்ந்து தளம்பல் அடைதல்.
- ஏற்றுமதி அளவுகள் குறைவாக இருத்தல்.
- உலக சந்தையில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை
- உலக பொருளாதார மந்தம்
- இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளின் வளர்ச்சி மந்தமாக இருத்தல்.தீர்வுகள்
- உலகப் பொருளாதாரத்திற்கும் இலங்கைப் பொருளாதாரத்திற்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டுச் சந்தைகளில் மேற்கொள்ளப்படும் விநியோக ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னேற்றுதல்.
- வர்த்தக உடன்படிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ள வலுப்படுத்துதல்.
- நவீன ஏற்றுமதி சந்தைகளைப் பாதுகாப்பதற்குத் தற்போதுள்ள சந்தைகளை விஸத்ரிககப்படுதலும் பல்லினத்தன்மை கொண்ட பொருட்களை அறிமுக்கப்படுத்தலும்.
- ஏற்றுமதிக்காக உருவாக்கும் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு அவசியமான நிறுவனங்களைத் தோற்றுவித்தல்.
- ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு ஆலோசனை சபைகளை உருவாக்குதல்.

5. பொருளாதார ஒருங்கிணைப்புக்களின் வடிவங்கள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (Preferential Trade Agreement - PTA)
சுதந்திர வர்த்தக வலயம் (Free Trade Area - FTA)
தீர்வை வரிச் சங்கம் (Custom Union - CU)
பொதுச் சந்தை (Common Market - CM)
பொருளாதார மற்றும் நிதிச் சங்கம் (Economic & Monitory Union - EU)
பூரண பொருளாதார ஒருங்கிணைப்பு (Fully economic Intergration - FEI) (4x1=4 புள்ளிகள்)

---

**10.** 1. சென்மதி நிலுவை அட்டவணையில் நீண்டகாலப் பற்றாக்குறையொன்று காணப்படும்போது அதற்காக முன்வைக்கக்கூடிய தீர்வுகளைக் குறிப்பிடுக?
- ஏற்றுமதி பன்முகப்படுத்தல்.
- வெளிநாட்டிலிருந்தான நேர்முதலீடுகளை ஊக்குவித்தல்.
- மரபுரீதியான ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்.
- ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை உருவாக்கல்.
- வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளல்.
- நாணயமாற்று விகிதத்தைத் தேய்வடைவதற்கு இடமளித்தல் அல்லது மதிப்பிறக்கம் செய்தல்.
- உள்நாட்டுப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையை அதிகரிக்கச் செய்தல்.
- இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்களை விருத்தி செய்தல்.
- அத்தியாவசியமான இறககுமதிகள் தவிர ஏனைய இறகக் மதிகளை அதைரியபபடுத்தல்.

(4x1=4 புள்ளிகள்)

2. வெளிநாட்டு வள இடைவெளி என்றால் என்ன? வெளிநாட்டு வள இடைவெளி மறைப் பெறுமதியில் காணப்பட ஏதுவான காரணங்கள் எவை?

குறித்த காலப் பகுதியினுள் பொருளாதாரத்தினுள் வருகின்ற சகல வெளிநாட்டுப் பெறுகைகளுகக்கும் பொருளாதாரத்தில் இருநுது வெளிச் செல்கின்ற சகல வெளிநாடடுக் கொடுப்பனவுகளுக்கும் இடையிலான வித்தியாசம் வெளிநாட்டு வள இடைவெளி என அழைக்கப்படும். (2 புள்ளிகள்)

- ஏற்றுமதிகளுடன் ஒப்பிடும் போது இறக்குமதிகள் கூடிய பெறுமதியைக் கொண்டிருத்தல்
- முதனிலை வருமானப் பெறுகைகளை விட முதனிலை வருமானச் செலுத்தல்கள்அதிகமாக இருத்தல்.
- கடன் மீளச் செலுத்தல்கள் அதிகமாக இருத்தல்.
- வணிக வங்கிகளின் மூலம் வெளிநாடுகளுக்குச் செய்யப்படும் செலுத்தல்களின் தொகை அதிகமாக இருத்தல். (2x1=2புள்ளிகள்)

3. வெளிநாட்டுச் சொத்துக்களில் உள்ளடங்கும் கூறுகளைக் குறிப்பிடுக?

- மத்திய வங்கியிடமுள்ள வெளிநாட்டு வங்கி வைப்புக்கள்
- மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ள வெளிநாட்டு உண்டியல்கள்
- இலங்கை அரசிடமுள்ள விசேட எடுப்பனவு உரிமைகள்
- வணிக வங்கிகளிடமுள்ள வெளிநாட்டுச் சட்ட முறைப் பணம்
- வணிகங்களின் கொள்வனவு செய்துள்ள வெளிநாட்டு உண்டியல்கள் (4x1=4புள்ளிகள்)

4. நாணயமாற்று விகித மதிப்பிறக்கத்தின் பொருளாதார விளைவுகள குறிப்பிடுக?

- இறக்குமதிகளின் உள்நாட்டு விலைகள் உயர்வடைதல்.
- முன்னரை விட இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தல்.
- உள்நாட்டுக் கேள்வி இறக்குமதிகளின் மீது தங்கி இருக்குமாயின் உள்நாட்டுப் பணவீக்கம் உயர்வடைய முடியும்.
- வெளிநாட்டுக் கடன் தவணைக் கொடுப்பனவுகள், வட்டி என்பன உயர்வடைதல்.
- சுற்றுலா உழைப்புக்கள் அதிகரிக்கும் அதேவேளை சென்மதி நிலுவை அட்டவணையில் சேவைக்கணக்கின் மீதி சாதகமாக அமையும்.
- இலங்கையில் மத்திய கிழக்கு உட்பட வெளிநாடுகளில் வேலை செய்வோரது பண அனுப்பல்கள் அதிகரிப்பதன் காரணமாக மாற்றல் கணக்குச் சாதகமாக அமையும்.
- இறக்குமதி விலைகள் அதிகரிப்பதனால் இறகக் மதிகள் குறைவடைந்து இறக்குமதிக்கான கேள்வி உள்நாட்டுப் பண்டங்களை நோக்கித் திரும்பும்.
- ஏற்றுமதிப் பண்டங்களுக்காக கேள்வி அதிகரித்து ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் அதிகரிக்கக் கூடும். (4x1=4புள்ளிகள்)

5. பெயரளவு நாணயமாற்று வீதம் மற்றும் மெய் நாணயமாற்றுவீதம் என்பவற்றை வறையறுக்குக?

பெயரளவு நாணயமாற்று வீதம் வரைவிலக்கணம் 2 புள்ளிகள்

மெய் நாணயமாற்றுவீதம் வரைவிலக்கணம் 2 புள்ளிகள்